1968 ஆகஸ்ட் 26]

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : தலைவரவர்களே, மத்திய சர்க்காரிடம் உள்ள அதிகாரங்களை மாநில அரசுக்குப் பகிர்ந்து கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்திவரும் இந்த அரசுக்கு முதலில் இந்த அரசிடம் குவிந்திருக்கும் அதிகாரங்களை ஸ்தல ஸ்தாபனங்களிடம் பகிர்ந்து கொடுக்க முன்வரும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மத்திய அரசிடமிருந்து இந்த அரசுக்குக் கிடைக்க வேண்டிய அதிகாரங்கள் கிடைத்தால் குவிந்திருப்பதாகச் சொல்ல முடியும். அந்த நிலை வரும்பொழுது நிச்சயமாகப் பகிர்ந்து கொடுப்பதிலே எந்தவிதமான சங்கடமும் ஏற்படாது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

THIRU K. VINAYAKAM : On a point of order, Sir. To my knowledge the heads of the panchayats are known as presidents. May I know when they became 'chairman' as is now printed in the question list ? மூற் பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக் கேள்வியிலே பஞ்சாயத்துத் தலைவர் என்றுதான் கொடுக்கப்பட்டிருக்கிறது. "சேர்மன்" என்று தவருகத்தான் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒற்றிவைப்புத் தீர்மானம்.

பள்ளிப் பாளையம் சேஷசாயி காகிதத் தொழிற்சாலை கதவடைப்பும் தொழிலாளர் நிலையும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள், "சேலம் மாவட்டம் பள்ளிப்பாளையம் சேஷசாயி பேப்பர் மில் திடீரென்று 23—8—1968 தேதி முதல் கதவடைப்பு செய்யப்பட்டுள்ளதைப் பற்றியும் அதை எதிர்த்து கிளர்ச்சி செய்த தொழிலாளர்களை கடுமையாகத் தாக்கியும் தொழிற்சங்க ஊழியர்களை கைது செய்துள்ளதைப்பற்றியும் அதனுல் 3,000 பேர்களுக்கு மேல் வேலையில்லாமல் கஷ்டப்படுவதைப்பற்றியும் விவாதிக்க சபையின் நடவடிக்கைகளை ஒற்றி வைக்க வேண்டும்" என்று ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிருர்கள்.

தொழில் தகராறுகளைத் தீர்க்க வேறு வழிவகைகள் இருக்கிற காரணத்தாலும், கதவடைப்புச் செய்வது, வேலை நிறுத்தம் ஆகியவற்றைப்பற்றி இங்கே ஒற்றிவைப்புத் தீர்மானம் கொண்டு வரக்கூடாது என்று சட்ட மன்ற விதிகள் இருப்பதாலும் இதற்கு நான் அனுமதி தர மறுக்கிறேன்.

3. அரசினர் தீர்மானம்.

விதி 41 (3)-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, இரண்டிற்கு மேற்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் ஒரே கூட்டத்தில் கொண்டுவருவது சம்பந்தமான விதியைத் தளர்த்த வேண்டுமென்ற தீர்மானத்தை மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் முன்மொழிவார்கள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, "ஒரே கூட்டத்தில் இரண்டிற்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டு வரக்கூடாது என்று 41 (3) விதியின்கீழ் உள்ள தடையை இன்று தளர்த்த வேண்டும்."

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஒருமனதாக நிறை வேற்றப்பட்டது.

4. கவன ஈர்ப்பு.

(i) பல்தொழிற் பள்ளிகளிலிருந்து விலக்கப்பட்ட ஆசிரியர்களின் நிலை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்பொழுது திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் அவர்கள் கல்வி, தொழிலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு உடனடிப் பொது முக்கியம் வாய்ந்த காரியத்தைக் கொண்டு வருவார்கள்.

THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Sir, I call the attention of the Hon. the Minister for Education and Industries to a matter of urgent public importance, namely the plight of the Lecturers in Polytechnics who have been retrenched much against their conditions of service.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே 1957 நவம்பர் 14-ம் தேதிக்கு முன்பு பல்தொழிற் பள்ளிகள் தொழில் வணிகத் துறை இயக்குநர் ஆளுகையில் இருந்து வந்தன. அரசாங்கப் பல்தொழிற் பள்ளிகளில் உள்ள சில பதவிகள் அப்போது தமிழகத் தொழிற் பணியிலும், தமிழகத் தொழில் சார்நிலைப் பணியிலும் சேர்க்கப்பட்டிருந்தன. சில பதவிகள் எந்த விதிகளின் கீழும் வரவில்லை. 1957 நவம்பர் 14-ம் நாளிலிருந்து தொழில் நுட்பக் கல்வித் துறை அமைக்கப் பட்டதன் விளைவாக மேற்சொன்ன துறையின் எல்லாப் பதவிகளுக்கும் தனித்தனிப் பணி விதிகளை இயற்றும் வேலை எடுத்துக் கொள்ளப்பட்டது. எதிர்பார்த்தவாறு இவ்விதிகளை உரிய காலத்தில் இறுதி செய்ய இயலவில்லை. ஆகவே, பல்தொழிற் பள்ளிகளில் உள்ள பல்வேறு பதவிகளுக்காகத் தனி விதிகள் இயற்ற முடிவு செய்யப்பட்டது. பெரும்பான்மையான பதவிகள் தமிழக அரசின் அலுவலர் தேர்வுக் கழகத்தின் ஆளுகையில் கொண்டு வரப்பட்டன. இதற்கெனத் தனி விதிகள் இயற்றப்படுகிற வரையில், (விரிவுரையாளர்கள் உட்பட) பல்தொழிற் பள்ளிகளில் உள்ள எல்லாப் பதவிகளுக்கும் அவசர கால விதித் துறைகளின் கீழ் தொடர்ந்து நியமனங்கள் செய்யப்பட்டு வந்தன.

கல்லூரிக் கல்வித்துறை பின்பற்றி வரும் நடைமுறையை ஒட்டி, அவசர கால விதித்துறைகளின் கீழ் நியமிக்கப்பட்டவர்களின் பணிகள் 1967-68 கல்வி ஆண்டின் முடிவில் தொழில் நுட்பக் கல்வி இயக்குனரால் நீக்கப்பட்டன. ஆனால் அவர்கள் அனைவரும் 1968-69 கல்வி ஆண்டின் தொடக்கத்தில் மீண்டும் நியமிக்கப் பட்டனர். 1968-ம் ஆண்டு கோடை விடுமுறையின் போதும் ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்பட்டது. தமிழக அரசு அலுவலர் தேர்வுக் கழகத்தால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னரே, அவர்கள் முறையாகப் பணியில் சேர்த்துக் கொள்ளப் படுவர்.

பெரும்பான்மையான தாற்காலிகப் பதவிகளுக்குத் தனி விதிகள் இப்போது இயற்றப்பட்டுள்ளன. அவ்விதிகளை ஒட்டி, தாற்காலி நியமனங்களை முறைப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.